ஓ.பி. எண் 4510/2022, 4511/2022 தேதி 01/08/2025

எமசா 2

பெயர் - திரு. சரவணபவன்

த.பெயர் - திரு. சந்தானம்

வயது - 47

விலாசம்- மயிலாபூர், சென்னை

**முதல் விசாரணை -**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரரின் உதவி துணை தலைவராக உள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அதை படித்து பார்த்து கையொப்பம் இட்டேன். எனது தரப்பு ஆவணங்கள் எமசாஆ 3 முதல் எமசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எமசாஆ 3 ID Card

எமசாஆ 4 Insurance Policy with Terms and conditions

எமசாஆ 5 Copyof Final Report along with Alteration Report

எமசாஆ 6 Copy of Registration Certificate of cehicle TN-18-BH-7484

எமசாஆ 7 Copy of Notice to the 1st Respondent with Postal receipt and returned cover

எமசாஆ 8 Copy of Notice to the Driver of the 1st Respondent's lory with postal receipt and Acknowledgment card

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமான எனக்கு நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து வழக்கிற்கு நிறுவனத்தில் இருந்து ஒரு புலன் விசாரணை அதிகாரியை நியமிப்பது வழக்கம் என்றால் ஆமாம். இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. உண்மைதன்மை தெரியவரும் என்பதற்காக மேற்கண்ட அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எமசாஆ 5 இறுதி அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியுள்ளார் என்று குறிப்பு காணப்படவில்லை என்றால் பிரிவு மாறுதல் அறிக்கையில் வாகனத்தின் உரிமையாளர் வாகன ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதற்கு அபராதம் செலுத்தியுள்ளார் என்பதால் அந்த பிரிவு நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எமசாஆ 6 ன் படி விபத்து சமயத்தில் பொருட்கள் இல்லாமல் ஓட்டி இருப்பதால் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் செல்லத்தக்கல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு LMV, BADGE ENDORSEMENT உள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் ஓட்டிச் சென்ற வாகனம் HMV ஆகும். அவருடைய ஓட்டுநர் உரிமம் படி 7,500 Kg. வரை ஓட்டலாம் என்றால் சரிதான். அதனால் விபத்து சமயத்தில் 4,150 எடையுள்ள வாகனத்தை ஓட்டிச் சென்றதால் முறையான ஓட்நடுர் உரிமத்துடன் வாகனத்தை ஓட்டியுள்ளார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தால் எங்கள்

நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

SUJATHA Digitally signed by SUJATHA Date: 2025.08.02 17:08:36 +0530

**1வது சிறப்பு நீதிபதி**
**சிறு வழக்கு நீதிமன்றம்,**
**சென்னை**